

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கடையால் பேரூராட்சி, திற்பரப்பு படகு இல்லத்தில் இன்று (21.06.2016) தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை சார்பாக நடைபெற்ற பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சியினை நேரில் சென்று பார்வையிட்டார். மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு. கல்யாணகுமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 384/2016 நாள்: 21.06.2016

**இயற்கை இடர்பாடுகள் ஏதேனும் ஏற்பட்டால் அதனை உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நடைபெற்ற பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சியில், பொதுமக்களிடம் வேண்டுகோள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கடையால் பேரூராட்சி, திற்பரப்பு படகு இல்லத்தில் இன்று (21.06.2016) தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை சார்பாக நடைபெற்ற பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சியினை நேரில் சென்று பார்வையிட்டு, தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளபெருக்கு ஏதேனும் ஏற்படும்போது, பொதுமக்கள் அதிலிருந்து எவ்வாறு மீள்வது குறித்து, அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பாக கடையால் பேரூராட்சியில் இன்று பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. குறிப்பாக பொதுமக்கள் வீட்டில் உபயோகிக்கும் பொருட்கள் மற்றும் எளிதாக கிடைக்கும் பொருட்களை வைத்து (குடம், தேங்காய் மட்டை, தண்ணீர் கேன், தண்ணீர் பாட்டில், காலியான சிலிண்டர், வாழைதண்டு) எவ்வாறு வெள்ளபெருக்கிலிருந்து மீள முடியும் என்பதை தீயணைப்புதுறை அலுவலர்கள் ஒத்திகை காட்டினார்கள். மேலும் வெள்ளபெருக்கிலிருந்து மீட்டி எடுத்தவர்களுக்கு அளிக்கப்படும் முதலுதவி, உடனடி மருத்துவ சிகிச்சை ஆகியவற்றை மருத்துவதுறை அலுவலர்கள் மேற்கொண்டார்கள். வெள்ளபெருக்கு ஏதேனும் ஏற்படும்போது வருவாய்துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை, மருத்துவ துறை, கால்நடை பராமரிப்புதுறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து பணியாற்றி, உயிர் சேதம் ஏதும் ஏற்படாதவகையில் பணியாற்ற வேண்டும் என கேட்டு கொண்டார்.

தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் 230 மி.மீ மழை பதிவாகியுள்ளது. ஆகையால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் -1 மற்றும் சிற்றார் -2 ஆகிய அணைகளுக்கு நீர் வருகை அதிகரித்துள்ளது. இதனை 24 மணி நேரமும் கண்காணிக்க பொதுப்பணித்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இயற்கை இடர்பாடுகள் அல்லது இயற்கை சீற்றங்கள் ஏதேனும் ஏற்பட்டால், பொதுமக்கள் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு 1077 என்ற இலவச தொலைபேசி மூலம் தெரிவு படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து ஒத்திகை நிகழ்ச்சியில் காண வருகை தந்த சி.எஸ்.ஐ. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, புனித மேரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வின்னர்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் திருமதி. ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு. கல்யாணகுமார், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. எம்.மதுசூதனன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு. சுதாகர், மரு. கிறிஸ்டோபர், மரு. பிரைட், தீயணைப்பு நிலையான அலுவலர்கள் திரு. அசோக்குமார், திரு. அண்ணாதுரை, திரு. துரை, வட்டாட்சியர்கள் திரு. ஆறுமுகநயினார், திரு. குமாரதாஸ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.